1971 டிசம்பர் 15]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, is the Hon. Minister giving any information to the Income-tax Department, I would like to know?

திரு. ஜே. ஜேம்ஸ் : மதுரையில் வழக்கறிஞர்களுக்கு அறைகள் அமைத்துக் கொடுப்பது போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற நீதிமன்றங்களில் பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களுக்கு அறைகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களுக்குப் புதிதாக நீதிமன்ற கட்டடங்கள் கட்டும் போது அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

வாணியம்பாடிக்கு மாவட்ட முன்சீப் கோர்ட்

*423 வினா—திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடியில் ஒரு மாவட்ட முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை

*424 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை எப்போது தனது உற்பத்திப் பணியைத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை தனது உற்பத்திப் பணியை 1972 பிற்பகுதியில் தொடங்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. அ. தியாகராசன் : தலைவரவர்களே, இந்த சரிகைத் தொழிற்சாலை அரசுத் துறையிலா அல்லது தனியார் துறையிலா, எப்படி அமைக்கப்படும், அதற்கு மூலதனம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சுமார் ரூ. 25 லட்சம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதைக்கு இதை அரசுத் துறையில் ஆரம்பிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சரிகைத் தொழிற்சாலையில் நெசவுக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலை அளிக்க முன் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்து பரிசீலிக்கப்படலாம்.